### இசையாஸ் ஆகமம் 9:6

ஏனெனில் நமக்காக ஒரு குழந்தை பிறந்துள்ளது, நமக்கு ஒரு மகன் தரப்பட்டுள்ளான்; ஆட்சியின் பொறுப்பு அவருடைய தோள் மேல் இருக்கும், அவருடைய பெயரோ, ”வியத்தகு ஆலோசனையாளர், வல்லமையுள்ள இறைவன், முடிவில்லாத் தந்தை, அமைதியின் மன்னன்” என வழங்கப்படும்.

### மத்தேயு 16:15-16

”நீங்களோ நான் யார் என்று சொல்லுகிறீர்கள்?” என்று இயேசு அவர்களைக் கேட்டார். சீமோன் இராயப்பர் மறுமொழியாக, ”நீர் மெசியா, உயிருள்ள கடவுளின் மகன்” என்றார்.

### மத்தேயு 24:44

இதை உணர்ந்து நீங்களும் ஆயத்தமாய் இருங்கள். ஏனெனில், நீங்கள் நினையாத நேரத்தில் மனுமகன் வருவார்.

### லூக்காஸ் 2:11

இன்று தாவீதின் ஊரிலே உங்களுக்காக மீட்பர் பிறந்துள்ளார். அவரே ஆண்டவராகிய மெசியா.